செ. வெ. எண் : 751 நாள் : 13.9.2008

<u>பத்திரிக்கை செய்தி</u>

## அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் ஏழை கர்ப்பிணி தாய்மார்கள் மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டம்

---

தமிழகத்திலுள்ள **1421** ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவத்திற்காக சேர்க்கப்படும் கருவுற்ற பெண்கள் மற்றும் குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் ஏழை தாய்மார்களுக்கு மூன்று வேளை உணவு வழங்கிட கடந்த சட்ட பேரவை மானிய கோரிக்கையின் போது மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது.

- தற்போது ஆண்டுதோறும் **ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும் 2.5 இலட்சம் பிரசவங்களும், 60,000 குடும்ப நல அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன.**
- இப்பணியை மேலும் ஊக்குவிக்கும் விதமாக ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவிக்கும் தாய்மார்களுக்கு மூன்று வேளை உணவு மூன்று நாட்களுக்கு வழங்க **ரூபாய் ஒரு கோடியே அறுபத்தோறு இலட்சத்து பதினெட்டாயிரத்து எண்ணூறு (ரூ. 1,61,18,800/–) நிதி தமிழக அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**
- ஆரம்ப சுகாதார நிலையங்களில் கர்ப்ப கால பரிசோதனையின் போது ஸ்கேன், இரத்த பரிசோதனை மற்றும் சர்க்கரை நோய் பரிசோதனைகள் செய்யப்படுகிறது. இந்த பரிசோதனை முடிவதற்கு சுமார் 3 மணி நேரம் ஆகிறது. இதனால் கர்ப்பிணிகள் பசியுடன் வீடு திரும்பக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே ஆரம்ப சுகாதார நிலையங்களில் பரிசோதனை செய்த கொள்ள வரும் கர்ப்பிணிகள் அனைவருக்கும் இலவச மதிய உணவு வாரம் ஒரு முறை வழங்கப்படும் இத்திட்டத்திற்கு ரூபாய்.25,50,000/– தேசிய ஊரக நல்வாழ்வு திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

மேற்கண்ட இவ்விரு திட்டங்களும் வருகிற **பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு பிறந்த தினமான 15.09.2008** அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட உள்ளது. மாவட்டங்களில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளும் இத்திட்டத்தை துவக்கி வைப்பார்கள்.

**ஆரம்ப சுகாதார நிலைய இலவச உணவு வழங்கும் திட்டத்தினால் விளையும் பயன்:-**

- இத்திட்டத்தின் மூலம், கிராமப்புற மக்கள் அதிக அளவில் ஆரம்ப சுகாதார நிலைய சேவைகளால் பயன் பெறுவார்கள். கிராமப்புற கர்ப்பிணிகளும், பிரசவித்த தாய்மார்களுக்கும் தரமான தாய்சேய் நல சேவைகள் கிடைக்கும். இதன்மூலம், தாய்மை இறப்பு மற்றும் சிசுமரணம் ஆகியவற்றை கனிசமாக குறைக்கலாம்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9